முருகப்பெருமான் துணை

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

07.11.2024

1. சோதி வழிகாட்டும் வேலவா போற்றி
சுத்த நெறியூட்டும் சண்முகா போற்றி
சோதியுள் கலந்து என் அவதாரத்தை
சித்தியாக்கி உலகெலாம் ஒளி வடிவாக

2. ஆகவே நிலைத்து நிற்க அருளிய
ஆறுமுகா உமை போற்றி இனிதே
வகைபட ஆறுமுக அரங்கனும்
வழங்குவேன் குரோதி துலை திங்கள்

3. திங்களிலே சூலவாம் குருவார அருளாசி
தொண்டர் பெருமக்கள் வளமுற
ஓங்கார ஞானம் உலகம் பெற
ஓதிடுவேன் உலகை நோக்கி

4. உலகை நோக்கி அரங்கனென்
உயர் ஞானமும் தருமமும்
பழக்க வழக்கம் முறைகளாக
பாடிடுவேன் மக்களெல்லாம் ஏற்று

5. ஏற்று நடக்கும் வழிகளாக
எங்கும் அரங்கனென் சக்தி
மாற்றம் தரும் ஆற்றலாக
மகத்துவம் கூடும் வண்ணம்

6. வண்ணமுடன் பரவி நின்றுமே
வையகம் அழிவு தரும் மாயை
எண்ணம் செயல்வழி செல்லாது
இலகுவாய் தரும ஞான வழி மீட்டு நின்று

7. நின்றுமே நிலவுலகில் தருமம்
நீதி காக்கப்பட்டுச் சிறந்து
நன்றான செயல் திட்டங்களாக
நம்பிக்கை தரும் வண்ணம் ஆளுமை

8. ஆளுமை சக்திகளும் மாறிட
அற்புதம் அரங்கன் புரிவேன்
வலுவாக என் தொண்டர்கட்கு
வரம்பல தந்து பலவான்களாக

9. ஆகவே ஞான பலமிக்கவர்களாக
அனைத்துத் துறைகளிலும் நிரப்பி
மிகைபட எங்கும் சன்மார்க்க
முதன்மை கொள்கை நிரம்பிட

10. நிரம்பிட சமூக மாற்றமாக்கி
நிலவுலகே பின்பற்றி வர
அருந்தவசி அரங்கன் யானும்
அற்புதங்கள் பல இனி புரிவேன்

11. இனிதே பிரணவக் குடில் நோக்கி
இணைந்து வந்து மக்களெல்லாம்
தனிப்பெருங்கருணை வடிவான
தருமத்தை வளர்க்க தனித்துவம் அடைவர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–